தவறுகள் நிகழ்கிறது என்று அவர்களுக்குத் தெரிந்தால் அந்தக் குறிப்பிட்ட கடை அல்லது பங்கை அதிகாரிகளுக்கு உறுப்பினர் தெரிவித்தால் அவர்கள் தக்க நடவடிக்கையை எடுப்பார்கள். இப்போதும் சட்டத்தின்படி அப்படி கலப்படம் செய்து விற்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 182, திரு. எஸ். ஆர். ஜெயராமன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

182—

மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு கூடுதல் வசதி

***9527**—*திரு. எஸ். ஆர். ஜெயராமன் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குண்டான வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அவ்வசதிகள் செய்து தரப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு உண்டான பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் இவர்களெல்லாம்—சென்னையிலே இருந்து சீனியாரிட்டி அடிப்படையிலே நியமிக்கப்படுகிறவர்கள்—சேலத்திற்கு வந்து அவர்களெல்லாம் பணியாற்றுவதற்குப் பதிலாக லீவு போட்டுவிட்டு வந்து விடுகிற காரணத்தினால், அங்கே படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு உண்டான சூழ்நிலைகள் இல்லாமல் இருக்கிறது. போஸ்ட் மார்ட்டம்

1995 ஏப்ரல் 3]

செய்வதற்குக்கூட டாக்டர்கள் இல்லாத நிலை இருக்கிறது. இவைகளை அரசு அறியுமா ? அதன் காரணமாக அங்கே இருக்கின்ற மாணவர்கள் எல்லாம் பயிற்சி பெறுவதற்குண்டான வாய்ப்புகள் இல்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையிலே தற்போது சிவில் சர்ஜன் அளவிலே 37 பேர்களும், அஸிஸ்டெண்ட் சர்ஜன் அளவிலே 98 பேர்களும், ஆக மொத்தம் 135 பேர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அடுத்து, டீச்சிங்கிற்காக 2 பிரிவுகள் - 15 பேர்களும், 120 பேர்களுமாக பணியாற்றி வருகிறார்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்னாலே அல்லது ஓராண்டுக்கு முன்னாலே அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருந்தன. அரசு அதற்கான நடவடிக் கைகளை எடுத்து அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இப்போது அங்கே முறையாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். எல்லா இடங்களிலேயும் சீனியாரிட்டி அடிப்படையிலே நியமிக்கப் படுகிறபோது, இரண்டொரு இடங்களிலே அப்படி காலியாக இருப்பது நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு இப்போது அரசு தனித் திட்டமாக பல வழிமுறைகளை வகுத்திருக்கிறது. அவை அமல்படுத்தப்படுகிறபோது இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள கே.எம்.சி., எம்.எம்.சி. மருத்துவமனைகள் எந்த அளவுக்கு ஃபுல் ப்ளெட்ஜ்டாக இருக்கிறதோ அதேபோல சேலம் மருத்துவமனையையும் அமைக்க அரசு கூடிய விரைவில் முன்வருமா என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 679 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. ஏறத்தாழ 23 டிபார்ட்மெண்டுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை இருக்கின்ற மாணவர்களுக்குப் போதிய அளவு வசதிகள் மெடிக்கல் கவுன்சில் நார்ம்ஸ்படி கொடுக்கப் பட்டிருக்கிறது. சென்னையிலே உள்ள மருத்துவமனைகள் மிகப்பெரிய மருத்துவமனைகள். இங்கே மாணவர்கள் கூடுதலாக இருக்கின்றார்கள். ஆனால், சேலம் மருத்துவ மனையைப் பொறுத்தவரை அந்தக் கல்லூரியில் உள்ள மாணவர்களுக்குத் தகுந்தாற்போல் இப்போது வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு அரசு செய்து கொடுத்துள்ள வசதிகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட பட்டியல் இருக்கிறது. குறிப்பாக, தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். படுக்கை வசதிகள் ஏற்கனவே இருக்கின்றன. அங்கே காலியாக இருந்த இடங்கள் உடனே நிரப்பப்பட வேண்டுமென்று பெரும்பகுதியான இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. இரண்டொரு காலியிடங்கள் இருக்கலாம். பெரும்பகுதியான இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. அங்கே 23 டிபார்ட்மெண்டுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு வசதியாக இருக்கும். வரிசையாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் General Medicine, General Surgery, O.G., Family Welfare, Anatomy, Orthopaedics, Physical Medicine, Dental, E.N.T., Ophthalmology, S.T.D., Dermatology, Paediatrics, Psychiatry, Nephrology, Cardiology, Radiology, Neurology, Urology, Cardio-thoracic, Plastic Surgery, Paediatric Surgery, Blood Bank இப்படி 23 டிபார்ட்மெண்டுகள் இருக்கின்றன. எனவே, தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ் அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியில் படிக்கின்ற மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு காவிரி நீர் கிடைக்கவில்லை. எனவே, காவிரி நீர் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தக் கல்லூரி விடுதிக்கும், கல்லூரிக்கும் போர் வெல் மூலமாக தண்ணீர் கொடுக்கப்படுவதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். காவிரி நீர் பற்றி எனக்குத் தகவல் இல்லை. இப்போது மாணவர்களுக்கு இருக்கின்ற பயிற்சி பற்றித்தான் கேட்கப்பட்டிருக்கிறது. எனவே, மற்ற வசதிகளைப் பற்றி நான் விசாரித்து அதற்குப் பிறகு தெரிவிக்கிறேன்.